# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1776/10 - 2012 සැප්තැම්බර් මස 18 වැනි අඟහරුවාදා - 2012.09.18

*1776/10 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 03 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழும் 13.07.2012 ஆந் திகதிய 1766/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட டின் மீன் தொடர்பான அறிவித்தல் (எச். எஸ். தலைப்பு 16.04), அத்துடன் 2012.08.10 ஆந் திகதியும் 1770/26 ஆம் இலக்கமும் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உருளைக் கிழங்கு (எச். எஸ். தலைப்பு இல. 0701.90) மற்றும் பெரிய வெங்காயம் (எச். எஸ். தலைப்பு 0703.10.20) தொடர்பான அறிவித்தல் ஆகியவற்றின் கீழும் வழங்கப்பட்ட உத்தரவு 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, செத்தெம்பர் 18.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 07.01 | 0701.90 | பிற - உருளைக் கிழங்கு | ரூபா 50 கி. கிராம் ஒன்றுக்கு |
| 2. | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயம் | ரூபா 50 கி. கிராம் ஒன்றுக்கு |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *இல.* | *எச்.எஸ். தலைப்பு* | *எச்.எஸ். குறியீடு* | *விவரணம்* | |
| *3.* | *16.04* | *1604.11* | சால்மோன் | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | *1604.12* | ஹேறிங்கள் | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | *1604.13* | சாடிகள், சாடினெல்லாவும் பிறிஸ்லீங் அல்லது நெத்தலி | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | *1604.14* | ரியுனாக்கள், ஸ்சிப்ஜாக்கும் போளிற்றோவும் (சார்டா இன) | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | *1604.15* | மக்கறல் | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | *1604.16* | அஞ்சோவிஸ் | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | *1604.19* | பிற | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | *1604.20* | பிற தயாரிக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட மீன்கள் | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |

*10 - 211*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.